தயாநிதி மாறன் தொடர்ந்த கிரிமினல் அவதூறு வழக்கில்

எழும்பூர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி இன்று ஆஜர்

தொகுதி நிதி குறித்து அவதூறாக பேசிய விவகாரம்

சென்னை, மே 14: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் தொடர்ந்த கிரிமினல் அவதூறு வழக்கில் எடப்பாடி பழனிசாமி இன்று எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜராகிறார்.

சென்னை எழும்பூர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மத்திய சென்னை திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் எம்பி தாக்கல் செய்துள்ள மனுவில், சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் அதிமுக சார்பில் கடந்த ஏப்ரல் 15ம் தேதி நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது கூட்டணி கட்சியான தேமுதிக வேட்பாளரை ஆதரித்து பேசும்போது, 'நம்முடைய கூட்டணிக் கட்சி வேட்பாளரை எதிர்த்து நிற்கிற திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய வேட்பாளர் அவருடைய சொந்த நலனுக்காக போட்டியிடுகிறார். நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள அவர் நாடாளுமன்ற மேம்பாட்டு நிதியில் கிட்டதட்ட 75 சதவீத நிதியை செலவே செய்யவில்லை' என்று கூறியுள்ளார்.

உண்மைத்தன்மையை ஆராயாமல் எடப்பாடி பேசிய இந்த பேச்சு உண்மைக்கு புறம்பானது, மக்கள் மத்தியில் எனக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார். எந்த ஆதாரங்களும் இல்லாமல் என்மீது அவதூறு பரப்பியுள்ளார். பொது மக்களுக்கு சேவை செய்வதையே முழுநேர பணியாக கொண்டு செயல்படும் என்மீது தொகுதி மக்களிடமும், தமிழக மக்களிடமும் உள்ள நற்பெயரைக் கெடுக்கும் வகையில் எடப்பாடி பேசியுள்ளார். எடப்பாடி பழனிசாமியின் இந்தப் பேச்சு எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் உள்ள நற்பெயருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

எந்த அடிப்படை ஆதாரமும் இல்லாமல், தொகுதி மேம்பாட்டு நிதியை 75 சதவீதம் நான் பயன்படுத்தவில்லை என்று அவதூறு ஏற்படுத்தும் வகையில் பேசியுள்ளார். இதுகுறித்து 24 மணி நேரத்தில் அவர் மன்னிப்பு கேட்காவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பேன் என்று தெரிவித்திருந்தேன். 24 மணி நேரமாகியும் அவர் மன்னிப்பு கேட்காததால் அவர் மீது கிரிமினல் அவதூறு வழக்கினை பதிவு செய்திருக்கிறேன்.

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி நிதியில் சுமார் ரூ.17 கோடியில் ரூ.17 லட்சம்தான் மீதம் உள்ளது. நான் 95 சதவீதத்திற்கு மேல் என் தொகுதி மேம்பாட்டு நிதியை செலவழித்துள்ளேன். 17 கோடி ரூபாய் என் தொகுதிக்கு ஒதுக்கப்பட்டது. அதைக் கொண்டு என் தொகுதிக்கு பல நலத்திட்டங்களை செய்துள்ளேன். எனவே, அவதூறு பரப்பியுள்ள எடப்பாடி பழனிசாமி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 500ன் கீழ் அவதூறு நடவடிக்கை எடுத்து அவரைத் தண்டிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனு எழும்பூர் 13வது மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது. இதையடுத்து, எடப்பாடி பழனிச்சாமி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகிறார்.

குடிநீர் திட்ட பணிகள் குறித்து ஆலோசனை

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் விநியோக நிலவரம் மற்றும் குடிநீர் திட்ட பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம், தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில், தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது. இதில், கூடுதல் தலைமை செயலாளர்கள் மற்றும் முதன்மை செயலாளர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

கிரிமினல் வழக்கு நிலுவையில் இருந்தால்

பாஸ்போர்ட் வழங்குமாறு கோர முடியாது

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மே 14: கிரிமினல் வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் பாஸ்போர்ட் கோர முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெளிநாடு செல்வதற்காக தனக்கு பாஸ்போர்ட் வழங்கக் கோரி சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் ஆர்.தமிழரசன் (22) என்பவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து, தனக்கு பாஸ்போர்ட் வழங்குமாறு சென்னை மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உத்தரவிடக்கோரி தமிழரசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டம் மங்களம்பேட்டை போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு கடலூர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கின் விசாரணைக்கு உயர் நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனால், மனுதாரருக்கு பாஸ்போர்ட் வழங்குமாறு மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

அதற்கு, அரசு வழக்கறிஞர் வினோத்குமார், கடலூர் சிறப்பு நீதிமன்றத்தில் மனுதாரர் மீது விசாரணையில் உள்ள வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்கில் ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உண்மையை மறைத்து பாஸ்போர்ட் அலுவலகங்களில் விண்ணப்பித்தால் அதன் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்ய பாஸ்போர்ட் சட்டத்தில் இடம் உள்ளது என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர் வெளிநாடு சென்று வேலை செய்வதற்காக பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பித்துள்ளார். தனது மீதான குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவர் பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பித்திருப்பது தெளிவாக தெரிகிறது. இதுபோன்று தங்கள் மீதான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது பாஸ்போர்ட் கேட்டு உயர் நீதிமன்றத்தை அணுகுகிறார்கள். அப்படி அனுமதி தரப்பட்டால் அது குற்ற வழக்குகளின் விசாரணையையே அழித்துவிடும். உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு இடைக்கால தடை உத்தரவு பெற்றுவிட்டதை காரணமாக கூறி பாஸ்போர்ட் வழங்க கோர முடியாது.

மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் உள்ள வழக்கை சந்தித்து அதன் தீர்ப்பின் அடிப்படையில் பாஸ்போர்ட் கோர உரிமை உள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுதுறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பிக்க முடியாது. எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று நீதிபதி உத்தரவிட்டார்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே

தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாஜகவினர் கைது

சென்னை, மே 14: சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாஜவினர் நேற்று கைது செய்யப்பட்டனர். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் அயலகப் பிரிவு தலைவராக இருந்த சாம் பிட்ரோடா, தென்னிந்திய மக்கள் ஆப்பிரிக்கர்கள் போன்றவர்கள் என்று அண்மையில் பேசியிருந்தார்.

இந்த பேச்சு பெரும் சர்ச்சையாக வெடித்தது. இதையடுத்து அவர் தனது கட்சி பதவியை ராஜினாமா செய்தார். இந்த நிலையில் சாம் பிட்ரோடாவின் பேச்சை கண்டித்து தமிழக பாஜ சார்பில் சென்னை வள்ளுவர்கோட்டம் அருகில் கட்சியின் துணைத் தலைவர் கரு.நாகராஜன் தலைமையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருப்பதால் ஆர்ப்பாட்டத்துக்கு போலீசார் அனுமதி வழங்கவில்லை.

இந்நிலையில் கரு.நாகராஜன், பாஜ மாநில செயலாளர் எஸ்.சதீஷ்குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் ராஜலட்சுமி, காயத்ரி தேவி, மாவட்ட தலைவர் காளிதாஸ் உள்பட நிர்வாகிகள் வள்ளுவர் கோட்டம் அருகே லேக் ஏரியாவில் திரண்டனர். இதைத் தொடர்ந்து அங்கு போலீசார் விரைந்து சென்றனர். அதற்குள் ஆர்ப்பாட்டம் நடத்த பாஜவினர் புறப்பட்டனர். அவர்களை அங்கேயே போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். 165 பேர் கைது செய்யப்பட்டு அனைவரும் அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

75 வயதுக்கு மேற்பட்ட

மூத்த குடிமக்களின் தேவைகளுக்கு உதவ சென்னை காவல் துறையின் பந்தம் சேவை திட்டம்

செல்போன் எண் அறிவிப்பு

சென்னை, மே 14: 75 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் தேவைகளுக்கு உதவ சென்னை பெருநகர காவல் துறையின் பந்தம் சேவை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான செல்போன் எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் ஆதரவற்ற நிலையில் சாலையோரம் வசிப்போர் மற்றும் முதியோர்களின் நலன் காக்கும் பொருட்டு சென்னை காவல்துறை சார்பில் காவல் கரங்கள் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி சாலையோரங்களில் ஆதரவின்றி இருக்கும் நபர்கள் மற்றும் முதியோர்களை மீட்டு அவர்களுக்கு மருத்துவ உதவிகள் அளித்து, உண்ண உணவும், இருப்பிடமும் இல்லாமல் இருப்பவர்களை காப்பகங்களில் சேர்க்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து காவல்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

மேலும் சாலைகளில் உள்ள ஆதரவற்ற முதியோர், பெண்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து சென்னை பெருநகர காவலில் இயங்கிவரும் முதியோர் உதவி மைய எண் 1253, பெண்கள் உதவி மைய எண் 1091, சிறுவர் உதவி மைய எண் 1098 மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறை எண் 100 ஆகியவற்றில் வரும் தகவல்கள் காவல் உதவி மையம் மூலம் பெறப்பட்டு ரோந்து வாகனத்திற்கு தகவல் கொடுக்கப்படும். மேலும், கண்டறியப்பட்ட இடத்திற்குச் சென்று அவர்களுக்கு உதவிடவும், உறவுகளால் கைவிடப்பட்ட நபர்களை அவர்களது உறவினர்களிடம் சேர்க்கவும், ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்நிலையில் மேலும் புதிய முயற்சியாக 75 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் வீட்டில் தனியாக இருப்பதால் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர். உற்றார், உறவினர்கள் இல்லாத 75 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தங்களுக்கு தேவையான மருந்துகள், சட்ட உதவிகள் போன்றவற்றை அவர்களே நேரில் சென்று பெற வேண்டியுள்ளதால் பல்வேறு சிரமங்களைச் சந்திக்கின்றனர்.

எனவே சென்னையில் புதிய திட்டமாக 75 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் தேவைகளுக்கு உதவிடும் வகையில் சென்னை பெருநகர காவல் துறையின் "பந்தம் சேவை" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. எனவே 75 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் 94999-57575 என்ற செல்போன் எண்ணை தொடர்பு கொண்டால் அவர்களுக்கு தேவையான உதவிகளை காவல் துறையினர் மூலம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து சென்னை பெருநகர காவல் துறையின் மூலம் சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்டு மூத்த குடிமக்கள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சான்றிதழ் வாங்க குவிந்த மாணவிகள்

பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற மாணவிகள் கல்லூரிகளில் சேர்வதற்காக மாற்று சான்றிதழ் வாங்கி வருகின்றனர். ஐயப்பன்தாங்கல் அரசு மேல்நிலைப்பள்ளியில் சான்றிதழ் வாங்க குவிந்த மாணவிகள்.

இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி

ராகுல்காந்தியுடன் நேருக்கு நேர் விவாதிக்க மோடி அஞ்சுகிறார்

செல்வப்பெருந்தகை விமர்சனம்

சென்னை, மே 14: இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி என்றும், ராகுல் காந்தியுடன் நேருக்கு நேர் விவாதிக்க பிரதமர் மோடி அஞ்சுகிறார் என்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடியுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்த தயார் என நேற்று முன்தினம் தனது சமூக வலைத்தளத்தில் ராகுல் காந்தி தெரிவித்தார். இந்நிலையில் இதுவரை மோடியிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அத்தகைய விவாதத்தை நடத்துவதற்கு மோடிக்கு துணிவில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மடியில் கனம் இருப்பதால் ராகுல் காந்தியுடன் விவாதிக்க மோடி தயாராக இல்லை.



மோடியை பொறுத்தவரை முதல்வராக இருந்த 11 ஆண்டு காலத்தில் சட்டமன்றத்திலோ, பிரதமராக பதவி வகித்த 10 ஆண்டுகளில் நாடாளுமன்றத்திலோ எத்தகைய விவாதங்களிலும் அவர் பங்கேற்று கருத்து மோதல்களுக்கு தன்னை உட்படுத்திக் கொண்டதில்லை. மோடி பேசுவார், அதனை மற்ற உறுப்பினர்கள் கேட்க வேண்டும். எந்தக் கேள்விக்கும் நாடாளுமன்றத்தில் அவர் பதில் சொல்லியதில்லை.

பிரதமர் பதவி வகித்த 10 ஆண்டு காலத்தில் ஒரு முறை கூட பத்திரிகையாளர்களை சந்தித்ததில்லை. ஏனெனில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்கிற துணிவை அவர் பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் நாள்தோறும் ராகுல்காந்தியை இளவரசர் என்று திரும்பத் திரும்ப குறிப்பிட்டு பேசுகிறார். இந்தியாவில் மன்னராட்சியை ஒழித்த இந்திரா காந்தியின் பேரப்பிள்ளையாக இருக்கும் ராகுல்காந்தியை பார்த்து இளவரசர் என மோடி அழைப்பது கேலிக்குரியது. புல்வாமா தாக்குதலை பயன்படுத்தி 2019 தேர்தலில் அரசியல் ஆதாயம் தேடியதைப் போல, 2024 தேர்தலில் ராமர் கோயில் பிரச்சனையை எழுப்பி, மக்களை திசைத் திருப்பி விடலாம் என்று மோடி கனவு காண்கிறார்.

மேலும் பாஜவினரும், மோடியும் மதரீதியாக மக்களை பிளவுபடுத்தி வெற்றி பெற்று விடலாம் என்கிற கனவை நாளுக்கு நாள் ராகுல்காந்தி தகர்த்து வருகிறார். தேர்தலுக்கு பிறகு இந்தியா கூட்டணி ஆட்சி அமைவது உறுதி என்கிற நம்பிக்கை வலுப் பெற்று வருகிறது. இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதியாகி இருக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Government of India
Bhabha Atomic Research Centre
Advertisement No. 02/2024 (R-V)

BRIEF NOTICE

BARC invites applications for the following training course being conducted under the aegis of Homi Bhabha National Institute (HBNI), which is a deemed to be University.

One-year post - M.Sc Diploma in Radiological Physics (Dip.R.P)

Duration of Course	1 year (August 2024 to July 2025)
No. of seats	30 (including upto 5 sponsored)
Age limit (Age as on 01/08/2024)	(a) General Category – 26 years (b) OBC – 29 years (c) SC/ST – 31 years **Persons with Benchmark Disabilities** are eligible for age relaxation of maximum up to 10 years. The candidates with physical disabilities limited to the lower extremities, but permitting to stand, move and physically able to carry out the course requirement only will be considered. For the sponsored candidates the age limit as on 01/08/2024 is 40 years.
Educational Qualification	Master Degree in Physics (M.Sc Physics) with not less than 60% marks in aggregate and BSc Degree (with Physics as main subject) with not less than 60% marks in aggregate. Candidates with Integrated M.Sc (Physics) with not less than 60% marks in aggregate are also eligible. In case of grade system, grade to percentage of marks conversion scheme obtained from University should be presented at the time of document verification/ interview. Those, whose final results of M.Sc (Physics) degree are awaited, but are otherwise eligible, can also apply. In addition to the above qualification, the sponsored candidates should have at least one-year working experience in radiotherapy department of Government Institution in India (supported by Personal monitoring services).
Stipend	**Rs. 25,000/- per month** (for non-sponsored candidate)
Closing Date for receipt of application	**04.06.2024 (Tuesday)**
Tentative date of Written Test	**30/06/2024 (Sunday)**

- Applications will be accepted On-Line ONLY. Facility for On-line application will be available from 14/05/2024 to 04/06/2024.
- Corrigendum/Addendum, if any, pertaining to this advertisement will be published only on BARC website.
- For General conditions and online submission of application please visit the website recruit.barc.gov.in / www.barc.gov.in.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது'** அடிப்படையில் **30–05–2024** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **30–05–2024** நாளில் பிற்பகல் **2.00** மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் **லிமிடெட்**, முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் **29–05–2024 அன்று மாலை 5 மணி வரை** அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி **'உள்ளது உள்ளவிடத்தில்** நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத்தொகை	சுவாதீனம் வகை
1.	TCHHL0 4040001 0008428 1	திரு. C முகமது ஹனீப் திருமதி ரேஷ்மாஷாஹதியா C S	Rs. 2,25,96,684/- 09-11-2022	பிளாட் எண்.S1– ரூ.70,00,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.65,00,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.65,00,000/–	பிளாட் எண்.S1– ரூ.7,00,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.6,50,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.6,50,000/–	கையக

அசையாச் சொத்து விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய அட்டவணை–A சொத்து (சொத்தின் மொத்த அளவு) சென்னை மாநகராட்சி எல்லைக்குள், புலியூர் கிராமம், எழும்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தின், சர்வே எண்கள். 125/1 மற்றும் 125/4, டி.எஸ். எண். 6/6, பிளாக் எண். 10 இல் அடங்கிய, பழைய கதவு எண். 35/1, முந்தைய கதவு எண். 35/5 மற்றும் 35/5 தற்போதைய கதவு எண்கள். 101/1 மற்றும் 101/2, பாரி தெரு, புலியூர், சூளைமேடு, சென்னை–600094 இல் 2395 சதுர அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** பாரி தெரு, **தெற்கில்:** கால்வாய், கிழக்கில்: பழைய கதவு எண். 35, புதிய கதவு எண். 99, **மேற்கில்:** பழைய கதவு எண். 35/2, புதிய கதவு எண். 102. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–36 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்–35 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–74 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–66 அடி. மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.
அட்டவணை 'B' சொத்து: (சொத்து இதன்மூலம் உரிமை மாற்றப்பட்டது) ஃபிளாட் எண் **S2** என்ற, இரண்டாம் தளத்தில் 558 சதுரடி அடிமட்டப் பரப்பளவுடன் அட்டவணை 'A' இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 248 சதுரடி மற்றும் ஃபிளாட் எண். **S3** என்ற இரண்டாம் தளத்தில் 830 சதுரடி அடிமட்டப் பரப்புடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 370 சதுரடி
மேலும் ஃபிளாட் எண். **S1** என்ற இரண்டாம் தளத்தில் 1019 அடிமட்டப் பரப்புடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 454 சதுரடி. கட்டிட பரப்பளவு 558 சதுரடி பொதுப் பரப்புகள் உட்பட தூண் தளத்தில் ஒரு மேற்கூரையிட்ட கார் நிறுத்துமிடம் உட்பட, அடோன் என்று பெயரிடப்பட்ட அபார்ட்மெண்ட்.

2.	9042033	திருமதி. ராமதாஸ் உமா, திரு. பழனிசாமி நாடார் ராமதாஸ்	Rs. 1,58,54,531/- 14-08-2023	பிளாட் எண். F–9 ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சம் மட்டும்) பிளாட் எண். S–2 ரூ.27,00,000/– (ரூபாய் இருபத்தேழு லட்சம் மட்டும்)	பிளாட் எண். F–9 ரூ.2,90,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) பிளாட் எண். S–2 ரூ.2,70,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	கையக சுவாதீனம்

அசையா சொத்தின் விவரங்கள்: சொத்து 1– அட்டவணை A: சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்–பதிவு மாவட்டத்திற்குள், கதவு எண்.42 பகுதி, சிஎம்டிஏ அங்கீகார எண்.130/ 2009, ஆவடி நகராட்சி BP.எண்.632/2009 தேதி 25.9.2009, சர்வே எண்.284/1, T.S.No.43, திருமுல்லைவாயல் கிராமம், குளக்கரை தெரு, அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 11,780 ச.அடி பரப்பளவு உள்ள, பட்டாவின் படி 11427 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு பகுதி உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** வரலட்சுமி அம்மாளுக்குச் சொந்தமான சொத்து மற்றும் சக்திவேலன் நிலம் (S.No.269/2), **தெற்கில்:** கிருஷ்ணமூர்த்திக்குச் சொந்தமான சொத்து, **கிழக்கில்:** பழைய ஈஸ்வரன் கோயில் தெரு, **மேற்கில்:** குளக்கரை தெரு. **அளவீடு: வடக்கில்:** 235 அடி, **தெற்கில்:** 235 அடி, **கிழக்கில்:** 50 அடி, **மேற்கில்:** 50 அடி.
அட்டவணை–B, 471 ச.அடி, மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தின் பிரிக்கப்படாத பங்கு.
அட்டவணை – C, சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்–பதிவு மாவட்டத்திற்குள், கதவு எண்.F9, முதல் தளம், முகப்பு பகுதி 1045 ச.அடி உள்ள அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட அட்டவணை A இல் அடங்கியுள்ள நிலத்தில் கட்டப்படவிருக்கும் கட்டிடம். **சொத்து:** II, **அட்டவணை A** இல் நிலம் மற்றும் கட்டிடம் கதவு எண்.42 பகுதி, சிஎம்டிஏ சிஎம்டிஏ அங்கீகார எண்.130/ 2009, ஆவடி நகராட்சி பிபி.எண்.632/2009 தேதி 25.9.2009, சர்வே எண்.284/1, T.S.No.43, திருமுல்லைவாயல் கிராமம், குளக்கரை தெரு, அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 11,780 ச.அடி பரப்பளவு உள்ள பட்டாவின் படி 11427 ச.அடி உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் உள்ள நிலமும் கட்டிடமும் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** வரலட்சுமி அம்மாளுக்குச் சொந்தமான சொத்து மற்றும் சக்திவேலன் நிலம்(S.No.269/2), **தெற்கில்:** கிருஷ்ணமூர்த்திக்குச் சொந்தமான சொத்து, **கிழக்கில்:** பழைய ஈஸ்வரன் கோயில் தெரு, **மேற்கில்:** குளக்கரை தெரு. அளவீடு: **வடக்கில்:** 235 **தெற்கில்:** 235 அடி, **கிழக்கில்:** 50 அடி, **மேற்கில்:** 50 அடி. 438 ச.அடி, மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தின் பிரிக்கப்படாத பங்கு. **அட்டவணை –C,** கதவு எண்.52, இரண்டாவது தளம், முகப்பு பகுதி 973 ச.அடி உள்ள அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட அட்டவணை A இல் அடங்கியுள்ள நிலத்தில் கட்டப்படவிருக்கும் கட்டிடம்

3.	TCHHL04 04000100 074391	திரு. R.ராஜ்குமார் திருமதி. R.செல்வகுமாரி	Rs. 20,49,950/- & 29-12-2021	ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)	ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	கையக சுவாதீனம்

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை– A: காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், எண்.28, பெருங்களத்தூர் கிராமம், பழைய பட்டா எண்.355 புதிய பட்டா எண்.7050 இன் படி சர்வே எண்.341/1C மொத்தமுள்ள ஏக்கர் 0.49 சென்ட்கள் நிலத்தில் வடக்குப் பகுதியான ஏக்கர் 0.24 ½ சென்ட்கள் பரப்பளவு உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் உள்ள சொத்தின் எல்லைகள்: **வடக்கில்:** சர்வே எண்.342, **தெற்கில்:** சர்வே எண். 341/1C பகுதியின் இன் மீதமுள்ள நிலம், **கிழக்கில்:** திரு. ஞானமூர்த்திக்குச் சொந்தமான நிலம், **மேற்கில்:** விநாயகமூர்த்திக்குச் சொந்தமான நிலம்.
அட்டவணை –B: காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், எண்.28, பெருங்களத்தூர் கிராமம், பழைய பட்டா எண்.355 மற்றும் 7050, புதிய பட்டா எண்.7991 இன் படி சர்வே எண்.341/1C2, 2700 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.A உள்ளடங்கிய அனைத்து துண்டுகளும் பகுதிகளும் உள்ள காலி வீட்டு மனையின் **எல்லைகள்: வடக்கில்:** பிளாட் எண்.B, **தெற்கில்:** 20அடி அகல சாலை, **கிழக்கில்:** 20 அடி அகல சாலை, **மேற்கில்:** சர்வே எண். 341/1B (விநாயகமூர்த்திக்குச் சொந்தமான நிலம்) **அளவீடு: வடக்கில்:** 61 அடி 6 அங்குலம், **தெற்கில்:** 56 அடி 6 அங்குலம், **கிழக்கில்:** 45 அடி 0 அங்குலம், **மேற்கில்:** 46 அடி 6 அங்குலம். மேலே உள்ள சொத்து பெருங்களத்தூர் டவுன் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டது. சென்னை தெற்கு பதிவு மாவட்டம், படப்பை சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. **அட்டவணை– C:** அட்டவணை – B இல் உள்ளடங்கிய பிரிக்கப்படாத பங்காகிய 323 ச.அடி (30.01 ச.மீட்டர்கள்) உள்ள சொத்து. **அட்டவணை– D:** மேலே விவரிக்கப்பட்ட அட்டவணை – B இல் 619 ச.அடி கட்டுமானப் பரப்பு மற்றும் பொது பகுதி உள்ள குடியிருப்பு பிளாட் எண்.F2, முதல் தளம், C பிளாக்கில் உள்ள சொத்து.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.
விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:
குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://www.bankeauctions.in **என்ற இணைய முகப்பு மூலம் 30–05–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.**
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2. அசையாச் சொத்து நிர்ணய விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கீழே முகவரியில் மாற்றத்தக்க வகையில் **"டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்."** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.
5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையெனத் தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியில் 22–05–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உட்பட கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளைத் தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்திய தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார். **11.** சொத்துக்கு உட்பட்ட, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s.4Closure, பிளாக் எண்.605 A, 6 ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்–500038 என்ற முகவரியில் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.அரிஜித் குமார் தாஸ், 8142000725, 8142000066, 8142000062, மின்னஞ்சல்: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மனீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish. Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும். 13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் http://surl.li/tltvg **15.** மேலும் https://www.tatacapital.com/property-disposal.html **இணைப்பையும் காண்க.**
கவனத்தில் கொள்க– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழேக் கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம் : தமிழ்நாடு,
நாள்: 14.05.2024

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்